உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திரு.கா.இன்பகார்த்திக், B.A., L.L.M.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை
**அமர்வு வழக்கு எண்.257 / 2025**
C.N.R. No.TNDG03-005443-2025
(முதல்நிலை விசாரணை வழக்கு எண்.24 / 2011)

குற்றமுறையிடுபவர் : தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.181 / 2011

எதிரிகளின் பெயர் :

1. செல்வம் (எ) செல்வராஜ், வயது 28/2011
த/பெ. ஜோசப்,
29, பேட்டை ரோடு, மேட்டுப்பட்டி,
திண்டுக்கல்.

2. வில்லியம்ஸ், வயது 24/2011
த/பெ. ஜோசப்,
29, பேட்டை ரோடு, மேட்டுப்பட்டி,
திண்டுக்கல்.

3. திபு (எ) தீபக், வயது 27/2011 **(இறப்பு)**
த/பெ. லெட்சுமணன்
165, தெற்குத் தெரு, மேட்டுப்பட்டி,
திண்டுக்கல்.

**குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106ன் கீழ்கண்ட அட்டவணை இணைக்கப்படுகிறது.**

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | வழக்கு எண் | SC.No.257 / 2025 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண்.181 / 2011 |

| | | |
|---|---|---|
| 3. | எதிரிகளின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | 1. செல்வம் (எ) செல்வராஜ், வயது 28/11<br>த/பெ. ஜோசப்,<br>29, பேட்டை ரோடு, மேட்டுப்பட்டி,<br>திண்டுக்கல்.<br><br>2. வில்லியம்ஸ், வயது 24/2011<br>த/பெ. ஜோசப்,<br>29, பேட்டை ரோடு, மேட்டுப்பட்டி,<br>திண்டுக்கல்.<br><br>3. திபு (எ) தீபக், வயது 27/2011 **(இறப்பு)**<br>த/பெ. லெட்சுமணன்<br>165, தெற்குத் தெரு, மேட்டுப்பட்டி,<br>திண்டுக்கல். |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 07.02.2011 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 07.02.2011 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1 – 08.02.2011 – 07.03.2011<br>A2 – 08.02.2011 – 01.03.2011<br>A3 – 10.02.2011 – 01.03.2011 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14.07.2011 |
| 8. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 11.09.2025 |
| 9. | விசாரணை தொடங்கிய தேதி | 10.02.2026 |
| 10. | விசாரணை முடிவுற்ற தேதி | 20.07.2026 |
| 11. | தீர்ப்பு அல்லது உத்தரவின் தேதி | 24.07.2026. |
| 12. | காலதாமத்தின் விளக்கம் | இல்லை |

<u>மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021ம் தேதியிட்ட சுற்றிக்கையான R.O.C.No.814/2020/RG/F1(P.DIS.No.36/2021) உத்திரவின்படி case summary கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</u>

| | | |
|---|---|---|
| 1. | The Period of Remand of the Accused | A1 – 08.02.2011 – 07.03.2011<br>A2 – 08.02.2011 – 01.03.2011<br>A3 – 10.02.2011 – 01.03.2011 |
| 2. | The Date of filing of the complainant/Final Report in the Court | 13.10.2011 |
| 3. | The Date of Committal of the Case to the Court of Session. | 23.07.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | The Date of Questioning of the Accused U/s. 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be | 11.09.2025 | | | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions u/s. 317 of the Code | Nil | | | |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | | Chief | : | Cross |
| | | PW1, 2 | 10.02.2026 | : | 10.02.2026 |
| | | PW3, 4 | 19.05.2026 | : | 19.05.2026 |
| | | PW5 | 14.07.2026 | : | 14.07.2026 |
| 7. | Date of examination of the accused u/s. 351 BNSS of the Code | 20.07.2026 | | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be, and | Nil | | | |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil | | | |

1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் : வாதியின் மகன் எழில்மாறனை சட்டத்திற்கு புறம்பாக வழிமறித்த குற்ற செய்கைக்காக இ.த.ச பிரிவு 341–ன் கீழும், மேற்படி எழில்மாறனை கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சித்த குற்ற செய்கைக்காக இ.த.ச பிரிவு 307 உ/இ 34–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

எதிரிகளின் பதில் : குற்றவாளி இல்லை

நீதிமன்றத்தின் முடிவு : குற்றவாளிகள் இல்லை.

தண்டனை (அ) உத்தரவு அரசு தரப்பில் A1, A2 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ 34–ன் படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 3ம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டது.

எதிரிகள் எழுதி கொடுத்த பிணைமுறிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் இந்நீதிமன்ற ஆர்.பி.ஆர் எண்.27/2026–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையுள்ள கத்திகளை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக 20.07.2026ம் தேதியன்று வந்தபோது, தமிழக அரசுக்காக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.M.விஜயேந்திரன் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பழனிக்குமார் ஆகியோர் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :–**

07.02.2011ம் தேதி மாலை 4.30 மணியளவில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட திண்டுக்கல் R.S. கோழிக்கடை வளாகம் அருகே உள்ள ஆண்கள் கட்டண கழிப்பறைக்குள் சாட்சி எழில்மாறன் சென்றபோது, அங்கு வந்த எதிரிகள் முன்விரோதம் காரணமாக மேற்படி எழில்மாறனை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான குற்றமுறு எண்ணத்தில் மேற்படி எழில்மாறனை வழி மறித்து "நாங்கள் குடிக்க பணம் தரமாட்டியா" என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து "நீ உயிருடன் இருக்கிறதே வேஸ்ட்" என்று சொல்லி எழில் மாறனின் இடது பக்க கழுத்தை அறுத்தும், 2ம் எதிரி தான் வைத்திருந்த கத்தியால் எழில்மாறனின் வலது கன்னத்தில் கீறியும், 3ம் எதிரி

தான் வைத்திருந்த கத்தியால் எழில்மாறனின் நெற்றியில் வெட்டியும், எதிரிகள் மூவரும் மேற்படி எழில்மாறனை கொலை செய்ய முயற்சித்துள்ளனர். எனவே, திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ, 34-ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் முதன்மை பதிவேட்டு வழக்கு எண்.24 / 2011 ஆக 13.10.2011-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், 3ம் எதிரி இறந்துவிட்டதால், அவர் மீதான வழக்கு அற்றுப் போய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது. 1, 2 எதிரிகள் ஆஜரானதும், 1, 2 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 307-ன் படியான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச்சாட்டு என்பதால், மேற்படி முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு திண்டுக்கல், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்படி முதல் நிலை பதிவு வழக்கினை 05.08.2025-ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.257/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர், இருதரப்பினைக் கேட்டு, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து 1, 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ, 34-ன் படி குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, மேற்படி குற்றச்சாட்டை மேற்படி எதிரிகளுக்கு விளக்கி கூறி வினவியபோது, 1, 2 எதிரிகள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று கூறியதால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், 12 சான்றாவணங்களும், 3 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை

**5. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

I. இவ்வழக்கின் புகார்தாரரான திருமதி.நிர்மலா ராணி(அ.சா.1) திண்டுக்கல் NGO காலனியில் உள்ள மகாலெட்சுமி நகரில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு வடமதுரையிலுள்ள அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் உதவி தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார். மேற்படி திருமதி.நிர்மலாராணியின் கணவரான திரு.பாரிவள்ளல் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்துள்ளார். மேற்படி நிர்மலா ராணியின் மகனான திரு.எழில்மாறன்(அ.சா.2) கல்லூரி படிக்கும் காலங்களில் இருந்து குடிப்பழக்கதிற்கு ஆளாகி தவறான நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு நிர்மலா ராணியிடம் பணம் வாங்கிக் கொண்டு ஊதாரித்தனமாக செலவழித்து வந்துள்ளார். மேற்படி எழில்மாறனின் நடவடிக்கைகளில் சந்தேகப்பட்ட திருமதி.நிர்மலா ராணி மேற்படி எழில்மாறனை விசாரித்தபோது, எதிரிகள் தான் தனக்கு மது வாங்கிக் கொடுத்து பழக்கப்படுத்தினார்கள். அவர்கள் மது அருந்துவதற்காக அடிக்கடி பணம் கேட்பதாகவும், தரவில்லை என்றால் தனது கெட்ட பழக்கத்தை குடும்பத்தில் சொல்லிவிடுவேன் என்று மிரட்டியதால் தான் அடிக்கடி பணம் வாங்குவதாக கூறியுள்ளார்.

Ii. இந்நிலையில், கடந்த 07.02.2011ம் தேதி மாலை 4.30 மணியளவில் திண்டுக்கல் R.S ரோட்டிலுள்ள நாட்டுக் கோழி கடைக்கு அருகே உள்ள கட்டண கழிப்பறைக்கு மலம் கழிப்பதற்கு மேற்படி எழில்மாறன் அவரது நண்பர்களான திரு.ரமேஷ் மற்றும் திரு.அப்துல்லா(அ.சா.3) ஆகியோருடன் சென்றபோது, 1 முதல் 3 எதிரிகள் மேற்படி எழில்மாறனை வழி மறித்து "குடிக்க பணம் தரமாட்டியா, நீ உயிரோடு இருக்கிறதுக்கு செத்துப் போடான்னு" சொல்லி, 1ம்

எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எழில்மாறனின் கழுத்தை அறுத்துள்ளார். 2ம் எதிரி ஒரு கத்தியால் எழில்மாறனின் வலது கழுத்தில் தாக்கியுள்ளார். 3ம் எதிரி ஒரு கத்தியால் எழில்மாறனின் நெற்றியில் வெட்டியுள்ளார். இதைப் பார்த்த திரு.தமணன், திரு.ரமேஷ் மற்றும் திரு.அப்துல்லா(அ.சா.3) ஆகியோர் எதிரிகளை பிடிக்க முயன்றபோது, மூவரும் அங்கிருந்து ஓடியுள்ளனர். பின்னர், மேற்படி ரமேஷ் மற்றும் அப்துல்லா காயம்பட்ட எழில்மாறனை ஒரு போக்கு ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். பின்னர், மேற்படி ரமேஷ் போன் செய்த நிர்மலா ராணிக்கு தகவல் கூறியுள்ளார். உடனே மேற்படி நிர்மலா ராணி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்டு பேச முடியாத நிலையில் இருந்த தனது மகன் எழில்மாறனை பார்த்துவிட்டு, நடந்த விவரங்களைப் பற்றி ரமேஷ் மற்றும் அப்துல்லா ஆகியோரிடம் விசாரித்து தெரிந்து கொண்டு திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் மனு(**அ.சா.ஆ.1)** கொடுத்துள்ளார்.

**Iii.** மேற்படி புகாரினைப் பெற்ற திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.பன்னீர்செல்வன் மேற்படி புகாரின் படி நிலைய குற்ற எண்.181/2011 இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307–ன் படி முதல் தகவல் அறிக்கை(**அ.சா.ஆ3)** பதிவு செய்துள்ளார். பின்னர், இரவு 7.45 மணியளவில் சம்பவ இடம் சென்று திரு.ஜாஹீர் உசேன் மற்றும் திரு.ராமசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர்(**அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம்(**அ.சா.ஆ.5)** தயார் செய்துள்ளார். பின்னர், புகார்தாரர் திருமதி.நிர்மலாராணி, காயம்பட்ட திரு.எழில்மாறன், சாட்சிகள் திரு.ரமேஷ், திரு.அப்துல்லா, திரு.தமணன், திரு.ஜாஹீர் உசேன் மற்றும் திரு.ராமசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**iv.** பின்னர் 08.02.2011ம் தேதி காலை 10.30 மணியளவில் திண்டுக்கல்

மதுரை ரோடு, தோமையார்புரம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து 1, 2 எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது, 1ம் எதிரி இவ்வழக்கின் குற்றச் செயலில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை(**அ.சா.ஆ.6)** சாட்சிகள் திரு.மரிய லூயிஸ் மற்றும் திரு.கஸ்பார்(**அ.சா.4)** ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கத்தியை குட்டைக் குளம், பாத்திமா மருத்துவமனை பின்புறம் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி சாட்சிகள் மற்றும் 1, 2 எதிரிகளுடன் மேற்படி இடத்திற்குச் சென்று 1, 2 எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கு சம்பவத்திற்கு 1, 2 எதிரிகள் பயன்படுத்திய கத்திகளை**(சா.பொ.1 மற்றும் சா.பொ.2)** அத்தாட்சி**(அ.சா.ஆ7)** தயார் செய்து கைப்பற்றியுள்ளார். பின்னர், 1, 2 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துவிட்டு, கைப்பற்றப்பட்ட கத்திகளை படிவம் 95**(அ.சா.ஆ.8)** மூலமாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**v.** பின்னர் 10.02.2011ம் தேதி மேட்டுப்பட்டி, பாஸ்கோ மேடை அருகே வைத்து 3ம் எதிரியை கைது செய்து விசாரித்தபோது, 3ம் எதிரி இவ்வழக்கின் குற்றச் செயலில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை**(அ.சா.ஆ.9)** சாட்சிகள் திரு.குருவராஜ் மற்றும் திரு.மாயவன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் 3ம் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கத்தியை மேட்டுப்பட்டி பாஸ்கோ மேடை பின்புறம் உள்ள கழிவு நீர் ஓடையில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி சாட்சிகள் மற்றும் 3ம் எதிரியுடன் மேற்படி இடத்திற்குச் சென்று 3ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கு சம்பவத்திற்கு 3ம் எதிரி பயன்படுத்திய கத்தியை அத்தாட்சியில்(**அ.சா.ஆ.10)** கைப்பற்றியுள்ளார். பின்னர், 3ம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி

வைத்துவிட்டு கைப்பற்றப்பட்ட கத்தியை(**சா.பொ.3**) படிவம் 95(**அ.சா.ஆ.11**) மூலமாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். பின்னர், சாட்சிகள் குருவராஜ் மற்றும் மாயவன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துவிட்டு இவ்வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.சுரேஷ் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

**vi.** இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திரு.சுரேஷ் முதல் விசாரணையை உறுதி செய்து கொண்டு, காயம்பட்ட எழில்மாறனுக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பாபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு(**அ.சா.ஆ.12**) பெற்றுள்ளார். பின்னர், முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.பன்னீர் செல்வன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ 34–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6.** அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் 1, 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து 1, 2 எதிரிகளிடம் BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவியபோது, 1, 2 எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்றும், பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ முன்னிடப்படவில்லை.

**7.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுதிநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதே ஆகும் ?

07.02.2011ம் தேதி மாலை 4.30 மணியளவில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட திண்டுக்கல் R.S கோழிக்கடை வளாகம்

அருகே உள்ள ஆண்கள் கட்டண கழிப்பறைக்குள் சாட்சி எழில்மாறன் சென்றபோது, 1, 2 எதிரிகள் இறந்துபோன 3ம் எதிரியுடன் சேர்ந்து முன்விரோதம் காரணமாக மேற்படி எழில்மாறனை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான குற்றமுறு எண்ணத்தில் மேற்படி எழில்மாறனை வழி மறித்து, 1 முதல் 3 எதிரிகள் கத்தியால் மேற்படி எழில்மாறனை தாக்கி கொலை செய்ய முயற்சித்து காயம் விளைவித்ததாக 1, 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ, 34–ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8.** இவ்வழக்கின் புகார்தாரர், வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட எழில்மாறனின் தாயாருமான திருமதி.நிர்மலா ராணி அ.சா.1 ஆகவும், வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட திரு.எழில்மாறன் அ.சா.2 ஆகவும், வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட திரு.அப்துல்லா அ.சா.3 ஆகவும், 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கண்ட சாட்சியான திரு.கஸ்பார் அ.சா.4 ஆகவும், தற்போதைய திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.பாலமுருகன் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

**9.** அ.சா.1 திருமதி.நிர்மலாராணி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவை தான் தான் எழுதினேன் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தனது மகன் எழில்மாறன் தன்னிடம் பணம் வாங்கிக் கொண்டு குடித்துவிட்டு நண்பர்களோடு சுற்றும் பழக்கம் வைத்திருந்தார் என்றும், 07.02.2011ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திலிருந்து மாலை 6.00 மணிக்கு தனக்கு போன் வந்தது என்றும், எழில்மாறன் அரசு மருத்துவமனையில் இருப்பதாகக் கூறி வரச் சொன்னார்கள் என்றும், தான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, தனது மகனுக்கு தலையில் 25 வெட்டுக் காயங்கள் மற்றும் கழுத்து அறுபட்டு உடம்பில் காயங்களோடு மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்தார் என்றும், நண்பர்களோடு ஏற்பட்ட

தகராறில் கோஸ்டி மோதலில் தனது மகனை வெட்டிவிட்டதாக போலீசார் சொன்னார்கள் என்றும், தனது மகனை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன் என்றும், மறுநாள் காவல் நிலையம் வந்து அவர்கள் சொல்லச் சொல்ல புகார் மனு எழுதினேன் என்றும், போலீசார் சொல்லித் தான் தனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றும், தனது மகனின் நண்பர்களைத் தெரியாது என்றும், அவரை அடித்தவர்களைப் பற்றியும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மூலமாக அவர் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடப்பட்டுள்ளது.

**10.** இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 திரு.எழில்மாறன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், 07.02.2011ம் தேதி கோவில் திருவிழாவில் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தபோது, வாய் தகராறு ஏற்பட்டு தள்ளிவிட்டதில் காயமானது என்றும், தன்னை அடித்தவர்கள் யார் என்று நேரடியாகத் தெரியாது என்றும், செல்வம் என்ற பையனும், வில்லியம்ஸ் என்ற பையனும் அடித்ததாக ஊர் பெரியவர்கள் சொன்னார்கள் என்றும், அடிபட்ட பிறகு தனக்கு சுயநினைவு இல்லை என்றும், போலீசார் தான் மயக்கமாக இருந்தபோது விசாரித்தார்கள் என்றும், எதிரிகளை கைது செய்துவிட்டோம் என்று கூறி கையொப்பம் வாங்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் மூன்று சாட்சிகள் முன்னிறுத்தப்பட்ட நிலையில், அவர்களில் சாட்சிகள் திரு.ரமேஷ் மற்றும் திரு.தமணன் தற்போது எங்கு உள்ளார்கள் என்பது தெரியவில்லை என்றும், அவர்கள் இருவரும் தற்போது அவர்கள் சொன்ன முகவரியில் வசிக்கவில்லை என்பதற்கு கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளதாகவும், அவர்கள் இருவருக்கும் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணை திருப்பப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்து மேற்படி கிராம நிர்வாக அலுவலர்

வழங்கிய சான்று மற்றும் திருப்பப்பட்ட பதிவு தபால்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இரண்டு சாட்சிகளையும் ஆஜர் செய்ய இயலாத நிலையை சுட்டிக்காட்டி அவர்களை விசாரணை செய்வதில் இருந்து விலக்களிக்க அரசு தரப்பில் முன்வைத்த கோரிக்கை ஏற்கப்பட்டது.

**12.** இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3 திரு.அப்துல்லா தனது சாட்சியத்தில், எதிரிகளைத் தெரியாது என்றும், சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் கவடக்காரர் தெருவிற்கு அருகே உள்ள காளியம்மன் கோவில் பக்கத்தில் தான் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றுவிட்டு வந்தபோது, மாலை 4.30 மணியளவில் எழில்மாறன் என்பவர் அடிபட்டு கிடந்தார் என்றும், அவருக்கு உடல் முழுவதும் காயமாக இருந்தது என்றும், அவரை ஒரு போக்கு ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று தன்னால் அறிந்துகொள்ள முடியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** அ.சா.3 போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கு மாறாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராகவும் சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் அ.சா.3ஐ பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தனர். ஆனால், மேற்படி குறுக்கு விசாரணையில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சங்கதிகளும் வெளிப்படவில்லை.

**14.** 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 1, 2 எதிரிகளிடமிருந்து கத்திகளை கைப்பற்றியபோது இருந்த சாட்சியாக அரசுதரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.4 திரு.காஸ்பர் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்று ஒப்புக் கொண்டபோதிலும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், 1ம்

எதிரி தன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவோ, 1, 2 எதிரிகள் தன் முன்னிலையில் கத்திகளை எடுத்து ஆஜர் படுத்தியதாகவோ எதுவும் சொல்லவில்லை. அ.சா.4 மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.4ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியிடப்பட்டது. அ.சா.4 போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கு மாறாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராகவும் சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் அ.சா.4யும் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தனர். ஆனால், மேற்படி குறுக்கு விசாரணையில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சங்கதிகளும் வெளிப்படவில்லை.

**15.** திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய தற்போதைய ஆய்வாளரான அ.சா.5 திரு.பாலமுருகன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை பற்றி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**16.** அ.சா.1ன் சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.1 புகார் மனுவில் இருந்தும் அ.சா.1 இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், அ.சா.1 சம்பவம் பற்றி கேள்விப்பட்டு மருத்துவனை சென்று காயம்பட்ட தனது மகனை பார்த்துள்ளார் என்பதும், புகார் மனுவிலுள்ள சங்கதிகளை காவல் நிலையத்தில் உள்ளவர்கள் சொன்னதை வைத்தே அ.சா.1 எழுதியுள்ளார் என்பதும் புலனாகிறது. சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.2ம் தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை தாக்கியதாக அறுதியிட்டு கூறாமல் 1, 2 எதிரிகள் தன்னை அடித்ததாக ஊர் பெரியவர்கள் கூறினார்கள் என்றே சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக முன்னிறுத்தப்பட்ட மூன்று சாட்சிகளில் இரண்டு சாட்சிகள் தற்போது எங்கு வசிக்கின்றனர் என்பது தெரியாத நிலையில், அவர்களை விசாரிக்க இயலவில்லை. வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக முன்னிறுத்தப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3ம் தனது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.2ஐ தாக்கியதாகவோ, அதை அவர் நேரில் பார்த்ததாகவோ சொல்லவில்லை. அ.சா.4

மற்றும் அ.சா.5 வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது.

**17.** எதிரிகள் தான் அ.சா.2ஐ தாக்கி காயப்படுத்தினார்கள் என்பதற்கோ, எதிரிகள் அ.சா.2ஐ சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தினார்கள் என்பதற்கோ எவ்வித நேரடி சாட்சிகளும் இல்லாத நிலையில், சம்பவத்தை நேரில் பார்த்ததாக முன்னிறுத்தப்பட்ட அ.சா.3ம் சம்பவம் பற்றி எதுவும் சொல்லாத நிலையில், எதிரிகள் தான் அ.சா.2ஐ தாக்கியதாக கேள்விப்பட்டதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 அளித்துள்ள சாட்சியத்தையும், சம்பவம் பற்றி நேரடியாகத் தெரியாத அ.சா.4 மற்றும் அ.சா.5ன் சாட்சியத்தையும் மட்டும் வைத்து 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ 34ன் படியான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது. எனவே, 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ 34ன் படியான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டனர் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**18.** முடிவாக, A1, A2 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 341 மற்றும் 307 உ/இ 34–ன் படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 3ம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டது.

**19.** எதிரிகள் எழுதி கொடுத்த பிணைமுறிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது.

**20.** இவ்வழக்கில் இந்நீதிமன்ற ஆர்.பி.ஆர் எண்.28/2026–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையுள்ள கத்திகளை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பிறகு அது, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை

திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் ஜூலை மாதம் 24–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.08.18 18:47:46 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

அரசுத் தரப்புச் சாட்சிகள் :–

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. நிர்மலாராணி |
| அ.சா.2 | திரு. எழில்மாறன் |
| அ.சா.3 | திரு. அப்துல்லா |
| அ.சா.4 | திரு. கஸ்பார் |
| அ.சா.5 | திரு. பாலமுருகன், காவல் ஆய்வாளர் |

அரசுத் தரப்புச் சான்றாவணங்கள் :–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.02.2011 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 08.02.2011 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அ.சா.4ன் 2வது கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.3 | 07.02.2011 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 07.02.2011 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 07.02.2011 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 08.02.2011 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.7 | 08.02.2011 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.8 | 08.02.2011 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.9 | 10.02.2011 | தேதியிட்ட 3வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.10 | 10.02.2011 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.11 | 10.02.2011 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.12 | 07.02.2011 | தேதியிட்ட விபத்து பதிவேடு |

அரசுதரப்பு சான்று பொருள் :-

அ.சா.பொ.1 சுமார் 24 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தி ஒன்று

அ.சா.பொ.2 சுமார் 30 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தி ஒன்று

அ.சா.பொ.3 சுமார் 27 செ.மீ நீளமுள்ள நடுவில் துவாரத்துடன் கூடிய கத்தி ஒன்று.

எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :- இல்லை

குறிப்பு :-

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இந்த வழக்கு சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடப்படுகிறது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.08.18 18:47:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.